## அண்ணாவியார் சித்திரைவேலாயுதம்

ஆதிகோவிலடி வல்வெட்டித்தறை

### அறிமுகம்

#### பிறப்பு

இவர் தன்னுடைய பிறப்பை பற்றியும் மூதாதையார் பற்றியும் எனக்கு அடிக்கடி கூறி பெருமைப்படுவார். அவர் கூறியதற்கிணங்க அவருடைய பரம்பரை ஆதிகோவிலடியைச் சேர்ந்த பெருமகன் வல்லியப்பர் முருகுப்பிள்ளையின் ( சிவலை முருகர்) சந்ததி வழி வந்தவரே அப்பாத்துரை சித்திரைவேலாயுதம் அவர்கள். இந்த வம்சாவழியை நோக்கின் என்னுடைய தாயாராகிய வள்ளியம்மாளும், இவருடைய தாயாராகிய இராசம்மாவும், (புலியாச்சி) அக்கா தங்கை பிள்ளைகளான ஒன்றுவிட்ட சகோதரர்கள் ஆவார். இந்த புலியாச்சியின் (இராசம்மாவின்) கணவர் அப்பாத்துறை (புலியப்பா) ஆவார். இவர்களுக்கு பிறந்தவரே இந்த சித்திரைவேலாயுதம் ஆவார். இவருடைய ஒரேயொரு உடன்பிறப்பும் தங்கையுமான ராணி என அழைக்கப்படும் ராணியம்மாள் ஆவார். இப்பொழுதும் இவர் ஆதிகோவிலடியில் வாழ்ந்து வருகின்றார்.

சித்திரைவேலாயுதம் அவர்கள் பிறந்த தினம் :- 30.04.1942

அன்னார் அமரத்துவம் அடைந்த நாள்:- 08.11.2015

இவர் திருமணமாகி திருமலையில் சல்லி எனும் இடத்தில் வாழ்ந்து வந்தார். இறுதிக் காலத்திலும் அங்கேயே வாழந்தார். இவருடைய மனைவி ஞானாம்பிகா. இவர் பவா என அறியப்படுபவர். இவருக்கு வீரசுதாகரன் (சுதாகர்) என்ற ஒரேயோரு ஆண்பிள்ளை மட்டுமே உள்ளார்.

சித்திரைவேலாயும் அவர்களின் தந்தை அப்பாத்துரை என்பவரே வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலில் 1958ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுதும் ஆடப்பட்டு வரும் 12ம் திருவிழாவான புலி விளையாட்டினை ஆரம்பித்து வைத்தவர்களுள் முதன்மை வகித்தவராவார். (புலி விளையாட்டு பற்றிய கட்டுரையை – ஆதிகோவிலடி பக்கத்தில் காணலாம்) .

இந்த அப்பாத்துரை என்பவர் எனது தாயாரின் மூத்த சகோதரியான அன்னக்கண்டுவின் கணவன் வைரமுத்து என்பவரின் தம்பியார் ஆவார். மேற்கூறிய வைரமுத்து அன்னக்கண்டு தம்பதியினரின் பிள்ளைகள் சாமிநாதர் (மொக்குச்சாமி) செல்வராசா என்போரை குறிப்பிடலாம். இதில் சாமிநாதரின் இளையமகன் சாந்தன் தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவரே ஆதிகோவிலடியிலும் வல்வெட்டித்துறையிலும் காற்பந்தில் (Football) சிறந்த வீரனாக பலராலும் கௌரவிக்கப்பட்ட ஒருவராவார்.



90

வல்வை புளூஸின் பெருமைகளில் ஒருவர் சாந்தன்

ச.சாந்தசிவம்

வல்வை புளூஸ் கழகம் இன்றும் பெருமையுடன் நினைக்கும் உதைபந்தாட்ட வீரர்களில் சாந்தன் முக்கியமானவர். சாந்தனின் உதைபந்தாட்டத் திறமைகளையும், ஆற்றலையும் எழுதுவதும் ஆய்வதும் முடியாது. முன்னணி நிலையில் நின்று விளையாடும் இவர் பந்தை மிக நிதானமாக கால்களுக்கு இடையில் தட்டிக் கொண்டு ஓடும் போது இவர் எந்தத் திசையில் பந்தைத் தட்டப் போகிறார் என்பது யாராலும் தீர்மானிக்க முடியாது. இவர் பந்தைத் தன் கால்களால் கட்டுப்படுத்துவதும் பின்னுக்கு இழுப்பதும் அழகான காட்சி ஆகும். வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணப் பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் சாந்தன் தன் ஆளுமை மிக்க விளையாட்டால் அனைவரையும் கவர்ந்தவர். எவ்வளவு உயரத்தில் இருந்து வரும் பந்தையும் பந்து தடுமாறாமல் கட்டுப்படுத்தி நிறுத்தும் திறமை இவருக்கு உள்ளது. மூலைப் பந்தை (Corner) அடிப்பதிலும் இவர் மிகவும் சிறப்பான தகுதிமிக்கவர்.

மிக அதிகமான கோல்களைத் தனது காலத்தில் அடித்த சாந்தன் வல்வை புளூஸ் கழக ஐம்பதாண்டு நிறைவில் என்றும் நினைக்கப்படுவார்.

**இவரைப்பற்றிய புளூசின் பொன்விழா மலரில் காணப்பட்ட செய்தி**

## கலைத்துறை



**இளமைத் தோற்றத்தில் சித்திரை அண்ணா (1977)**

எமது மண்ணில் பிறந்து நாட்டுக்கூத்து கலைகளையும், புராண நாடகங்களையும் பக்திப்பாடல்களையும் வளர்த்த கலைஞர்கள் இலைமறை காயாக இருந்து இன்றும் பலர் வாழ்ந்து வருகின்றனர். அவர்களை இனம் கண்டு, ஊக்குவித்து கௌரவிக்கும் பணியில் வல்வை கலை கலாசார மன்றும் ஈடுபட்டுருப்பது மிகவும் பாராட்டப்பட வெண்டியதொரு விடயமாகும்.

அந்த வகையில் கலைப்பணிபுரிந்து தமது பூதவுடலை இழந்து வல்வை மண்ணுக்கு புகழ் தேடித்தந்த கலைஞர்களை நாம் வாழும்போது வாழ்ந்தாவிட்டாலும் வாழ்ந்தபின் போற்றுவதும் கௌரவிப்பதும் தமது கடமையென கலை கலாசார மன்றம்

கொள்கைப் பிடிப்புடன் செயற்பட்டு வருகிறது. அப்படியான நிகழ்வுகளை தமது வருடாந்த விழாக்களிலும் செய்து வருகின்றது. அந்த வரிசையில் ஆதிகோவிலடியில் 30.04.1942ல் பிறந்து பல கலைப்படைப்புக்களை உருவாக்கியவர்களுள் அமரர் அப்பாத்துரை சித்திர வேலாயுதம் இவரைப்பற்றிய சில தகவல்களையும் அவரின் சாதனையும் வல்வை மண்ணின் சார்பில் மட்டுமல்லாது திருமலை மக்கள் சார்பாகவும் புலம்பெயர் மக்களின் சார்பாகவும் ஆர்வலர்களுக்கு அறியத்தருவது எமது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

சிறுபராயத்திலிருந்தே தேவாரம், திருவாசகம், திருபுராணம், திருப்புகழ், கரகப்பாட்டுகள் என்பன பாடுவதிலும் ஆதிகோயில் வைரவப்பெருமாளினதும் வல்வை முத்துமாரி அம்பாளினதும் சந்நிதிகளில் நடைபெறும் விஷேட பூசைவழிபாடுகளிலும் கலந்து கொள்வது இவரது சிறுபராயக்கலை நடத்தையாக இருந்தது. விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள் அந்த வகையில் காத்தவராயன் கூத்து, அரிச்சந்திர புராணம் போன்ற நாடகங்களில் சிறுபாத்திரங்களிலும் பிள்ளைக்காத்தான், முன்காத்தான் போன்ற வேடங்களிலும் நடித்து பலரது பாராட்டையும் பெற்றார். அத்துடன் மாரியம்மன் தாலாட்டு, மற்றும் பட்டினத்தார் பாடல்களையும் தங்களை மறந்து ஐக்கியப்படும் வண்ணம் மனமுருகப்பாடுவார்.

அதுமட்டுமல்லாது கரகப்பாட்டு, உடுக்கு போன்ற துறைகளிலும் தனது கணீர் எனும் குரல் மூலம் பக்தர்களைப் பரவசப்படுத்துவார். இவர் 1958ல் வல்வை முத்துமாரி அம்மன் 12ம் திருவிழாவில் முதன் முதலில் உருவாக்கப்பட்டு நடிக்கப்பட்ட 'புலித்திருவிழாவில்'' புலியாக நடித்த அப்பாத்துரை பற்றிய ஆரம்பகால தகவல்களை சரித்திரச்சான்றாக எழுதி என்னிடம் ஒப்படைத்துள்ளார். இப்புலியாட்டம் என்ற நிகழ்வுக்கு காரணகர்த்தர்களாக இருந்தவர்கள் 12ம் திருவிழா உபயகாரர்களால் கட்டப்பட்ட கோபுரத்தின் சிற்பிகளே. இன்று உலகமெல்லாம் பரிணாம வளர்ச்சியுடன் கொண்டாடப்படும் இவ்விடயம் பற்றி பிறிதொரு சந்தரப்பத்தில் அறியத்தரலாம். (இத்துடன் இணைப்பாக உள்ளது.)

இவருடைய தந்தையார் வழி உறவினர்களுள் திருமணபந்தம் சம்மந்தமாக திருமலை சல்லியம் பதியுடன் தொடர்பு கொண்டமையால் இவர் அங்கு தனது குடும்ப வாழ்வை, ஆரம்பித்து இறுதிவரை அங்கு வாழ்ந்து சிவபதமடைந்தார். இவரது புகழ்கூற சிலரின் கருத்துக்களையுமு் நிகழ்வுகளையும் கீழே குறிப்பிடுகின்றேன்.

- 30க்கு மேற்பட்ட மேடைகளில் ஆரியமாலா எனும் காத்தவராயன் நாடகத்தை மேடையேற்றியுள்ளார்.
- இவரது புராணப்பாடல்களும் பக்திப்பாடல்களும் காலத்திற்கு காலம் கசட்டாகவும், இறுவெட்டுக்கலாகவும் (CD) வெளியிடப்பட்டு உலகெங்கும் எம்மக்களிடையே அவை பரவி நிற்கின்றது.
- சமீபத்தில் இவர் பாடிய ஆதிவைரவர் பற்றிய இறுவெட்டு வெளியிடப்பட்டு அவற்றின் பிரதி வெள்ளிதோறும் காலையில் ஒலிபரப்பப்படுகின்றது.
- சல்லியப்பதி ஒதுவராக தொண்டாற்றியது மட்டுமல்ல திருமலையில் ஒரு அண்ணாவியாராக இருந்து தனது சேவை மூலம் பல சீடர்களை உருவாக்கியுள்ளார்.
- கடந்த 12.10.2014ல் திருமலையில் 'தரிசனம் பப்ளிகேசன்'' நிறுவனத்தால் எடுக்கப்பட்ட கௌரவிப்பு விழாவில் பல நூற்றுக்கணக்கான மக்களுடன் கல்வித்துறைசார் சான்றோர்களும் திருமலை நகர்ப்புறத்திலிருந்து வந்து கலந்து சிறப்பித்தனர்.

இவருடைய கலை கலாசார சேவைகளை பாராட்டி இவருக்கு திருகோணமலை உதவி அரச அதிபரின் காரியாலயத்தின் கலை கலாசார அலுவலகத்தால் "**கலாபூஷணம்**" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அத்தோடு இவர் "**அண்ணாவியார், கிராமிய இசைத்திலகம்**" எனும் பட்டங்களாலும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

## வாசல்பாட்டு

சித்திரைவேலாயுதம் அவர்களும் கட்டுரையாளராகிய நானும் (ந.சிவரட்ணம்) ஒருமுறை நேரில் சந்தித்த போது, வாசல்பாட்டு பற்றி பின்வருமாறு கூறினார். *''இப்பாட்டினை அதாவது வாசலிது வாசலிது எனும் பாட்டை இயற்றியவர் சுந்தரமூர்த்தி (யப்பான் சுந்தரம்) என்பவரே. வல்வை முத்துமாரியம்மன் திருவிழாக்கால இறுதிநாளன்று (இந்திரவிழா) அம்பாள் ஊறணியில் தீர்த்தமாடி நெடியகாட்டு பிள்ளையார் கோவிலில் தரித்திருந்து மாலையில் ஊர்வலமாக தனது இடத்தை நாடி வருவது வழமை. இதன் பொழுது உலகமே வியக்கும் வண்ணம் நெடியகாட்டிலிருந்து ஊரிக்காடுவரை மகர தோரணங்களும், வாழைகளும், தெய்வங்களின் பிரமாண்டமான உருவப்படங்களும், மின் விளக்குகளின் அலங்காரங்களும் கூடிய வீதிவழியே வந்து அதிகாலையில் 5 மணியளவில் தனது சந்நிதியை அடைவாள். அப்பொழுது அன்னையை வரவேற்று உடுக்கு வாத்தியங்களுடன் இசைக்கப்படும் கூட்டுப்பாடலே இந்த ''வாசலிது வாசலிது '' பாடலாகும். (இந்தப்பாடல் தற்பொழுது திரிபுபட்டு தனது மூலவரிகளை இழந்து வேறுபல மெட்டுக்களில் பாடப்படுதை காணக்கூடியதாக உள்ளது) இப்பாடலை முதன் முதலில் இயற்றிய வல்வையைச் சேர்ந்த யப்பான் சுந்தரம் என்பவர் என்னை அழைத்து "இப்பாடலை நான் ரசிப்பதற்காக நீயே முதன் முதலில் எனக்கு பாடிக் காட்டு என கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க நானும் அவர் கூறிய மெட்டுக்களுடனும் உடுக்கு வாத்தியத்திடனும் அதனை இசைத்து காட்டினேன். அதனை ரசித்த அவர் எனக்கு பின் சரியாகவும் திறமையாகவும் சிறந்த மெட்டுக்கட்டுக்களுடனும் பாடக்கூடிய ஒரேயொரு ஆள் நீயேதான் என்றும் இப்பாடலை மெருகேற்ற நீ விரும்பினால் சிலவரிகளில் மாற்றங்களை செய்யும் படியும் நான் கேட்டுக்கொள்கிறேன் எனவும் கூறினார். இந்தப் பாரம்பரியத்தை தொடர்ந்து செய்யும் படி வேண்டுகோள் விடுத்து சில காலத்தின் பின் அமரரானார்''* அன்றிலிருந்து நான் இப்பணியை தொடர்ந்து செய்தே வருகின்றேன். ஆனால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்கவும் அவருடைய சம்மதத்துடனும் சில மாற்றங்களை செய்துள்ளேன், என்று கலந்துரையாடலில் அப்பாத்துரை சித்திரைவேலாயுதம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

இப்பாடலின் வரிகள் பின்வருமாறு:

1. வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது
2. மேடையிது மேடையிது எங்கள் மெல்லியாளுடைய மேடையிது
3. நாங்கள் பூசைபண்ணி அனுதினமும் புகழ்ந்தேற்றும் மாரி வாசலிது
4. ஆயிரம் மாரி கண்ணுடையாள் எங்கள் அலங்காரி வரும் வாசலிது
5. பதினாயிரம் மாரி கண்ணுடையாள் எங்கள் பராசக்தி வரும் வாசலிது
6. வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது
7. கங்கையிலே மாரி தலைமுழுகி எங்கள் கிளிமொழியாள் வரும்வாசலிது
8. பொய்கையிலே மாரி தலைமுழுகி எங்கள் வனமயிலாள் வரும் வாசலிது
9. பொய்கையிலே மாரி தலைமுழுகி எங்கள் பூங்கொடியாள் வரும் வாசலிது
10. சித்திரையா பறுவத்திலே அம்மன் தீர்ததமாடி வரும் வாசலிது
11. வீதிசுத்தி பவனிவரும் எங்கள் மேகவண்ணன் தங்கை வாசலிது
12. வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது
13. உலகளந்தோன் தங்கையராம் அம்மன் உத்தமியாள் வரும் வாசலிது
14. கோடியா கரையை விட்டு, இங்கு குதித்து வந்தாள் வரும் வாசலிது
15. அரனுடனே வாதாடும் எங்கள் ஆங்கார மாரி வாசலிது
16. சிவனுடனே வாதாடும் எங்கள் தேவி நல்லாளுடைய வாசலிது

17. வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது

**வாழும்போது வாழ்த்துவோம் என்னும் நிகழ்ச்சி திருமலையில் 12.10.2014 தரிசனம் பப்ளிஷேன் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட போது அண்ணாவியார் சித்திரைவேல் கௌரவிக்கப்பட்டதை காட்டும் சில காட்சிகள்.**



